# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மகப்பேற்று நன்மைகள் (திருத்தம்)

***(140 ஆம் அத்தியாயமான) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் 2018, மே மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, ஏப்பிறல் மாதம் 18 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***248 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2:** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, எந்தக் காலப்பகுதிக்காக மகப்பேற்று நன்மைகள் செலுத்தப்படவேண்டுமோ அந்தக் காலப்பகுதிக்காக ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 3:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, விதித்துரைக்கப்பட்ட வீதத்தில் மகப்பேற்று நன்மைகளைக் கொடுப்பனவு செய்வதற்காக ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 4:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பெண் வேலையாளர், ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்தருநர்களிடமிருந்து ஒரே பிள்ளைப்பேறு தொடர்பில் நன்மைகளை உரிமைகோராதிருப்பதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 5:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, மகப்பேற்றுக்கான லீவைக் கணக்கிடும் நோக்கத்துக்காக மகப்பேற்றுத் தேதியை வேலையாளர் தமது தொழில்தருநருக்கு அறிவிப்பதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 6:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, மகப்பேற்று நன்மைகளின் கொடுப்பனவுக்கான காலப்பகுதியை நிச்சயிப்பதற்கென எவரேனும் பெண் வேலையாளர் அவரது மகப்பேறு உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவித்ததா அல்லவாவென்பதைத் தொழில்தருநருக்கு அறிவிப்பதாகும்.

**வாசகம் 7:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவிலிருந்து 'மாற்று மகப்பேற்று நன்மைகளை' என்னும் சொற்களை நீக்கிவிடுவதாகும்.

**வாசகம் 8:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்குவதாகும்.

ச.வ.- ஓ. 23/2015

## (140 ஆம் அத்தியாயமான) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மகப்பேற்று நன்மைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*140 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(1) எவரேனும் பெண் வேலையாள் எந்தக் காலப் பகுதிக்காக மகப்பேற்று நன்மைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்தக் காலப்பகுதியானது-

(அ) பன்னிரெண்டு வாரங்களாகவிருத்தல் வேண்டும்; அதாவது, பிள்ளைப்பேறானது ஓர் உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவித்தால், அவரது பிள்ளைப்பேற்று நாள் வரையும் அந்நாள் உட்படவும் இரண்டு வாரங்களாகவும் அந்நாளை உடனடுத்துப் பின்வரும் பத்து வாரங்களாகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஆறு வாரங்களாகவிருத்தல் வேண்டும்; அதாவது, பிள்ளைப்பேறானது ஓர் உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவிக்காதிருந்தால், அவரது பிள்ளைப் பேற்று நாள் வரையும் அந்நாள் உட்படவும் இரண்டு வாரங்களாகவும் அந்நாளை உடனடுத்துப் பின்வரும் நான்கு வாரங்களாகவும் இருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட மேற்கூறப்பட்ட இரண்டு வாரக் காலப்பகுதியின்போது ஏதேனும் எண்ணிக்கையின வாக நாட்களுக்கு அத்தகைய பெண் வேலையாளர் அவரது தொழிலில் வேலைசெய்துள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப, மேற்கூறப்பட்ட பத்து வாரக் காலப் பகுதி அல்லது நான்கு வாரக் காலப்பகுதி எத்தேதியன்று முடிவடைகின்றதோ அத்தேதியை உடனடுத்துப் பின்னரான நாளன்று தொடங்கு கின்றனவும் அவரது பிள்ளைப்பேற்றை உடனடுத்துப் பின்னர் வருகின்றனவுமான அவ்வெண்ணிக்கையினவான நாட்களுக்கான மகப்பேற்று நன்மைக் கொடுப்பனவுக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“தொழில் தருநரின் பொறுப்பும் மகப்பேற்று நன்மையின் வீதமும்.

5. (1) பெண் வேலையாளரொருவரின் தொழில் தருநர், விதித்துரைக்கப்பட்ட வீதத்திலான மகப் பேற்று நன்மையை அத்தகைய வேலையாளருக்குப் பின்வருமாறு செலுத்துதல் வேண்டும்:-

(அ) பிள்ளைப்பேறானது ஓர் உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவித்தால், அத்தகைய பிள்ளைப்பேற்றுக்கு நேர்முற்போந்த இரண்டு வாரக் காலப்பகுதி மற்றும் அவரது பிள்ளைப்பேற்றை உடனடுத்து வருகின்ற பத்து வாரக்காலப்பகுதி முழுவதற்காகவும்; அத்துடன்

(ஆ) பிள்ளைப்பேறானது ஓர் உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவிக்காதிருந்தால், பிள்ளைப்பேற்றுக்கு நேர்முற்போந்த இரண்டு வாரக்காலப்பகுதி மற்றும் அவரது பிள்ளைப்பேற்றை உடனடுத்து வருகின்ற நான்கு வாரக்காலப்பகுதி முழுவதற்காகவும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பெண் வேலையாளர் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட மேற்கூறப்பட்ட இரண்டு வாரக் காலப்பகுதியின்போது எவையேனும் எண்ணிக்கையினவான நாட்களில் அவரது தொழிலில் வேலைசெய்துள்ளவிடத்து, அவரது பிள்ளைப்பேற்றின் பின்னர் அவ்வெண்ணிக்கையினவான நாட்களுக்கான மகப்பேற்று நன்மைக்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் எக்காலப்பகுதிகள் தொடர்பில் மகப்பேற்று நன்மைகளின் கொடுப்பனவுகள் செய்யப்படவேண்டுமோ அக்காலப்பகுதிகள், அவர் எந்த விடுமுறைக்கு அல்லது லீவுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த விடுமுறைக்கு அல்லது லீவுக்கு மேலதிகமானவையாகவிருத்தல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 6 ஆம் பிரிவைப் பதிலீடு செய்தல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*“பெண்கள் ஒரே பிள்ளைப் பேறு தொடர்பில், ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் தருநர்களிடமிருந்து நன்மைகளை உரிமை கோருதலாகாது.*

6. ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகளிலுள்ள தெதுவும், ஒரே பிள்ளைப்பேறு தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்தருநர்களிடமிருந்து இக்கட்டளைச்சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட மகப்பேற்று நன்மையை உரிமை கோருவதற்கு எவரேனும் பெண்ணை உரித்துடையவராக்குவதாகக் கருதப்படுதலாகாது.”.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) பிள்ளைபெற்றுள்ள பெண் வேலையாளரொருவர், அவரது பிள்ளைப்பேற்றிலிருந்து ஒரு வாரத்தினுள், அவர் பிள்ளைபெற்ற தேதிபற்றிய அறிவித்தலை அவரது தொழில் தருநருக்குக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், தொழிலுக்கு வராதிருப்பதற்கு அவர் அனுமதிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையை நிச்சயிக்கும் நோக்கத் துக்காக அப்பிள்ளைப்பேற்றிலிருந்து உயிருள்ளவொரு பிள்ளையின் பிறப்பு விளைந்ததா அல்லது இல்லையா என்பதனைக் குறித்துரைத்தலும் வேண்டும் ;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(4) தொழில்தருநர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் பெண் வேலையாளரொரு வரிடமிருந்து அறிவித்தலைப் பெற்றதன்மீது, அப் பெண் வேலையாளரைப் பின்வரும் காலப்பகுதிகளுக்குத் தொழிலுக்கு வராதிருப்பதற்கு அனுமதித்தல் வேண்டும்:-

(அ) பிள்ளைப்பேறானது ஓர் உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவித்தால், அவரது பிள்ளைப் பேற்றுக்கு நேர்முற்போந்த இரண்டு வாரங் களுக்கும் பிள்ளைப்பேற்றை உடனடுத்து வருகின்ற பத்து வாரங்களுக்கும் ; அத்துடன்

(ஆ) பிள்ளைப்பேறானது ஓர் உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவிக்காதிருந்தால், அவரது பிள்ளைப்பேற்றுக்கு நேர்முற்போந்த இரண்டு வாரங்களுக்கும் பிள்ளைப்பேற்றை உடனடுத்து வருகின்ற நான்கு வாரங்களுக்கும்:

ஆயின், எவ்வாறாயினும், (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட மேற்கூறப்பட்ட இரண்டு வாரக்காலப்பகுதியின்போது ஏதேனும் எண்ணிக்கையினவான நாட்களுக்காக அத்தகைய பெண் வேலையாளர் அவரது தொழிலில் வேலைசெய்துள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப, மேற்கூறப்பட்ட பத்து வாரங்களைக் கொண்ட அல்லது நான்கு வாரங்களைக்கொண்ட காலப்பகுதி எத்தேதியன்று முடிவடைகின்றதோ அத்தேதிக்கு உடனடுத்துப் பின்னரான நாளிலிருந்து தொடங்குகின்ற அவரது பிள்ளைப்பேற்றுக்குப் பின்னரான அவ்வெண்ணிக்கையினவான நாட்களுக்குத் தொழிலுக்கு வராதிருப்பதற்கு அவர் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.";

*(3)* அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(5) ஏதேனும் பிள்ளைப்பேற்றின் விளைவால் இச்சட்டத்தின்கீழ் பெண் வேலையாளரொருவர் எந்த லீவுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த லீவு, அவர் வேறேதேனும் சட்டத்தின்கீழ் அல்லது ஒழுங்கு விதியின் கீழ் எந்த விடுமுறைக்கு அல்லது லீவுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த ஏதேனும்விடுமுறைக்கு அல்லது லீவுக்கு மேலதிகமானதாகவிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம்பிரிவு, "இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பெண் வேலையாளர் எக்காலப்பகுதிக்காக மகப்பேற்று நன்மைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அக்காலப்பகுதியை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அவரது பிள்ளைப்பேறு ஓர் உயிருள்ள பிள்ளையின் பிறப்பை விளைவித்ததா அல்லதா என்பதை அவரது தொழில்தருநருக்கு அவர் அறிவித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் மகப்பேற்று நன்மையை அல்லது மாற்று மகப்பேற்று நன்மைகளை அவர் இழக்கின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் மகப்பேற்று நன்மையை அவர் இழக்கின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதன் (ஊ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**9.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.